www.freetnbooks.com

Tsi10SS

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

## வகுப்பு 10

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) பெருநாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?
அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

2) சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949
இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

3) சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடு நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?
அ) வேலு நாச்சியார் ஆ) கட்டபொம்மன் இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை

4) **கூற்று** : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது.
**காரணம்** : காங்கிரஸ் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள காந்தி இர்வின் ஒப்பந்தம் வழிவகை செய்தது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
ஆ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.
இ) கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

5) 1709 இல் தரங்கம்பாடியில் ............ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்

6) இந்தியாவின் காலநிலை ............ ஆக பெயரிடப்பட்டுள்ளது.
அ) அயனமண்டல ஈரக் காலநிலை ஆ) நிலநடுக்கோட்டு காலநிலை
இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை ஈ) மித அயன மண்டலக் காலநிலை

7) உலகிலேயே மிக நீளமான அணை ............
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

8) இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

9) இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
அ) 5846 கி.மீ ஆ) 5942 கி.மீ இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ

10) உலக உணவு மற்றும் வேளாண்மை கழகம் (FAO) ............ ஆம் ஆண்டை சர்வதேச திணைப்பெயர்கள் ஆண்டாக அனுசரிக்க தீர்மானித்துள்ளது.
அ) 2018 ஆ) 2022 இ) 2023 ஈ) 2024

11) கீழ்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர்நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

12) எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?
அ) அருணாச்சலப் பிரதேசம் ஆ) மேகாலயா இ) மிசோரம் ஈ) அஸ்ஸாம்

13) இந்தியா எப்போதும் டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

14) உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக்கொண்ட ஒரே மாநிலம் ............
அ) கேரளா ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடாகா

### பகுதி - II

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 10×2=20**

**வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

16) மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.

17) பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?

18) முழுமையான சுயராஜ்யம் என்றால் என்ன?

19) தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்கு பங்களிப்புச் செய்த ஆளுமைகளை பட்டியலிடவும்.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



20) இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
21) இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.
22) கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?
23) தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.
24) பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?
25) அணிசேரா இயக்கத்தின் நிறுவன தலைவர்கள் யாவர்?
26) உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதி வரையறை அதிகாரங்கள் யாவை?
27) FAOவின் படி உணவு பாதுகாப்பை வரையறு.
28) ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் பற்றி குறித்து நீவிர் அறிவது என்ன?

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **10×5=50**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
1. கட்டபொம்மன் ............ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
2. ............ என்பது தொலைவில் இருந்தே எதிரிகளின் போர் விமானங்களை கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
3. 'ஒரு பைசா தமிழன்' பத்திரிகையை துவக்கியவர் ............
4. கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் ............ ஆகும்.
5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஒன்று ............ ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

30) முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவரி.
31) பெண்களின் மேம்பாட்டிற்கு 19ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து விவாதிக்கவும்.
32) அ) **வேறுபடுத்துக:**
i) புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
ii) மேற்குத்தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

ஆ) **காரணம் கூறுக:** மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிரானவை.
33) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி.
34) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35) நகரமயமாக்கல் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.
36) புயலுக்கு முன்னரும், பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.
37) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக.
38) பிரிக்ஸ் கூட்டமைப்பு (BRICS) உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதவும்.
40) கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
41) 1900 முதல் 1950 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதவும்.
42) **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்:**
(i) இத்தாலி (ii) பசிபிக் பெருங்கடல் (iii) மாஸ்கோ (iv) செர்பியா (v) ஜப்பான்

## பகுதி - IV

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2×8=16**

43) அ) தமிழ் நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வே.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும். **(அல்லது)**

ஆ) தமிழ்நாட்டில் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.

44) **அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
1. ஆரவல்லி மலை
2. மாளவ பீடபூமி
3. தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
4. தேயிலை விளையும் பகுதி
5. வண்டல் மண்
6. இரும்பு எஃகு தொழிலகங்கள்
7. இலட்ச தீவுகள்
8. நர்மதை ஆறு

**(அல்லது)**

**ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
1. வைகை ஆறு
2. சேர்வராயன் மலை
3. பறவைகள் சரணாலயம் - 1
4. நெல் விளையும் பகுதி
5. சோழமண்டல கடற்கரை
6. துறைமுகம் - 1
7. பாக்நீர்சந்தி
8. நெய்வேலி

-----------

www.freetnbooks.com | FREETNBOOKS